## 145. பாட்டு சொல்லி தந்தவரு

### பல்லவி

பாட்டு சொல்லி தந்தவரு
ராகம் சொல்லி தந்தவரு
வார்த்தை சொல்லி தந்தவரே

### அனுபல்லவி

பாட்டு தந்த தேவனே
ராகம் தந்த தேவனே
வார்த்தை தந்த தேவனே
ஏ ஆவியான தேவனே

### சரணங்கள்

1. உம்மை பற்றி பாடிட
உம்மை பற்றி புகழ்ந்திட
உங்க நாமம் உயர்த்திட
ஜீவன் எனக்கு தந்தீரே
- பாட்டு சொல்லி

2. மகிமையின் தேவனே
மகத்துவ ராஜனே
மண்ணான என்மேலே
பாசம் வைத்த தேவனே
- பாட்டு சொல்லி

3. பரலோக தேவனே
என்னில் அன்பு கொண்டீரே
தன் சொந்த குமாரனையே
எனக்காய் தந்த தேவனே
- பாட்டு சொல்லி